STC.No. 22/2025
நாள் 09.01.2026.
P.W.1 – (குருவையா )
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மனுவின் பெயரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நானும் எதிரியும் ஒரே ஊர் கிடையாது என்றால் சரி. நானும் எதிரியும் உறவினர் அல்ல. எதிரியை எனக்கு யார் மூலமாக எவ்வாறு தெரியும் என்றால் நான் திருவில்லிபுத்துார் டவுணில் மீன் மார்க்கெட்டில் மீன் கடை வைத்துள்ளேன். எதிரி அவ்வபோது மீன் வாங்க வருவார். நான் மீன் மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் செய்கிறேன். என்னிடம் சில்லறை வியாபாரிகள் மீன் வாங்கி வியாபாரம் செய்கிறார்கள். அந்த வகையில் எதிரியை எனக்கு பழக்கம். எதிரி என்னிடம் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் ரூ.1,500/–ற்கு விலை அதிகமுள்ள மீன் வாங்குவார். எதிரி என்னிடம் தினமும் மீன் வாங்கி புதுப்பட்டியில் சில்லறை வியாபாரம் செய்கிறார் என்றால் சரியல்ல. எதிரி சமயலுக்குதான் என்னிடம் மீன் வாங்குவார். நான் சில்லறை வியாபாரிகளிடம் விற்பனை செய்யும் மீன்களில் விற்பனையாகாத மீன்களை திரும்ப வாங்குவது கிடையாது. நான் 2022ம் ஆண்டு அந்த வியாபாரத்திற்காக எதிரியிடம் இருந்து கையொப்பம் மட்டும் செய்த காசோலையை வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் மேற்சொன்ன வியாபார தொடர்பை தவிர்த்து வேறு தொடர்பு ஏதும் இல்லை.

பு.சா.ஆ.1 புரோநோட்டில் ஏற்கனவே ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு அது பிரித்து எடுக்கப்பட்டு பின்னர் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டதாக காணப்படுகிறது என்றால் இல்லை. அவ்வாறு ஸ்டாம்ப் பிரிக்கப்பட்ட வேறு ஒரு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டது புரோநோட்டை பார்த்தவுடன் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு இல்லை என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பு.சா.ஆ.1 சாட்சி விமல் சின்னப்பன் முன்பாக தாவா கடனை எதிரிக்கு கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. விமல் சின்னப்பன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்த போது தான் முதன் முதலாக எதிரியை பார்த்தார் என்றால் சரியல்ல. வியாபாரம் கணக்கு பார்த்த வகையில் எதிரி எனக்கு ரூ.10,000/– முதல் ரூ.20,000/– வரைதான் தரவேண்டும் என்றாலும் அந்த தொகையையும் எதிரி சேதத்தில் கழிக்க சொன்னார் என்றாலும் நான் அவ்வாறு செய்யாமல் எதிரி மீது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி தற்போது என் கடைக்கு அருகே உள்ள கடையில் மீன் கொள்முதல் செய்கிறார் என்றாலும் அந்த காழ்புணர்ச்சியில் எதிரியிடம் அதிக பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

வழக்கு சட்ட அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யவில்லை என்றால் சரியல்ல, வாங்கியுள்ளார். பு.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையொப்பமும் பு.சா.ஆ.5

ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பமும் வேறுபாடு உள்ளது என்றால் சிறிய வேறுபாடு காணப்படுகிறது. பு.சா.ஆ. 5 அஞ்சல் ஒப்புகை அட்டையில் எதிரி கையொப்பம் செய்திருக்கலாம். பு.சா.ஆ.5 அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் எதிரி கையொப்பம் இல்லை என்றாலும் நானாக அதனை உற்பத்தி செய்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்படாததால் வழக்கு மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அந்த சட்ட அறிவிப்பு பெயரில் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவும் நிலைக்க கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.